# ஜனவரி – 11 – வெள்ளி

## புனித ெலயாந்தர்

**எருசலேமே! ஆண்டவரைப் போற்றுவார்களாக! திபா. 147:12**

## முதல் வாசகம் : 1 யோவான் 5 : 5 – 13

அன்பார்ந்தவர்களே! இயேசு இறைமகன் என்று நம்புவோரைத் தவிர உலகை வெல்வோர் யார்? நீராலும்இ இரத்தத்தாலும் வந்தவர் இயேசு கிறிஸ்து. அவர் நீரால் மட்டும் அல்ல. நீராலும்இ இரத்தத்தாலும் வந்தவரென தூய ஆவியார் சான்று பகர்கிறார். தூய ஆவியாரே உண்மை. எனவே சான்று அளிப்பவை மூன்று இருக்கின்றன. தூய ஆவியும்இ நீரும்இ இரத்தமுமே அவை. இம்மூன்றும் ஒரே நோக்கம் கொண்டவை. மனிதர் தரும் சான்றை நாம் ஏற்றுக்கொள்கிறோமே! கடவுள் தரும் சான்று அதை விட மேலானது அன்றோ! கடவுள் தம் மகனுக்குச் சான்று பகர்ந்துள்ளார். இறைமகன்மீது நம்பிக்கை கொண்டுள்ளோர் இச்சான்றைத் தம்முள் கொண்டிருக்கின்றனர். ஆனால், கடவுள்மீது நம்பிக்கை கொள்ளாதோர் அவரைப் பொய்யராக்குகின்றனர். ஏனெனில்இ தம் மகனைக் குறித்து அவர் அளித்த சான்றை அவர்கள் நம்பவில்லை. கடவுள் நமக்கு நிலை வாழ்வை அளித்துள்ளார். இந்த வாழ்வு அவர் மகனிடம் இருக்கிறது. இதுவே அச்சான்று. இறைமகனைக் கொண்டிருப்போர் வாழ்வைக் கொண்டுள்ளனர் அவரைக் கொண்டிராதோர் வாழ்வைக் கொண்டிரார். இறைமகனிடம் நம்பிக்கை கொண்டுள்ளோருக்கு நிலைவாழ்வு உண்டு என நீங்கள் அறிந்து கொள்ளுமாறு உங்களுக்கு இவற்றை எழுதுகிறேன்.

**பதில்பாடல் :** எருசலேமே ஆண்டவரைப் போற்றுவாயாக.

## நற்செய்தி : லூக்கா 5 : 12 - 16

அக்காலத்தில் இயேசு ஓர் ஊரில் இருந்தபோது உடலெல்லாம் தொழுநோயால் பாதிக்கப்பட்டிருந்த ஒருவர் வந்தார். அவர் இயேசுவைக் கண்டு அவர் காலில் விழுந்து, ”ஆண்டவரே நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும்” என மன்றாடினார். இயேசு கையை நீட்டிஇ அவரைத் தொட்டு, ”நான் விரும்புகிறேன்” உமது நோய் நீங்குக!” என்றார். உடனே தொழுநோய் அவரைவிட்டு நீங்கிற்று. இயேசு அவரிடம், ”இதை யாருக்கும் சொல்லவேண்டாம். நீர் போய் உம்மைக் குருவிடம் காட்டி நோய் நீங்கியதற்காக மோசே கட்டளையிட்டுள்ள காணிக்கையைச் செலுத்தும். நீர் நலமடைந்துள்ளீர் என்பதற்கு அது சான்றாகும்” என்று கட்டளையிட்டார். ஆயினும் இயேசுவைப் பற்றிய செய்தி இன்னும் மிகுதியாகப் பரவிற்று. அவரது சொல்லைக் கேட்கவும் தங்கள் நோய்கள் நீங்கி நலம் பெறவும் பெருந்திரளான மக்கள் அவரிடம் கூடிவந்து கொண்டிருந்தார்கள். அவரோ ஆள் நடமாட்டம் இல்லாத இடங்களுக்குச் சென்று தனித்திருந்து இறைவனிடம் வேண்டிவந்தார்.

**தியானம்:** எம்மை பாவங்களினின்று மீட்டெடுக்க தனது ஒரே பேறான மகனை அழிக்கும் அளவிற்கு இறைவன் உலகின் மீது அன்பு கூர்ந்தார். மண்ணில் உதித்த இயேசுபிரான் பல அவமானங்கள் பட்டு, பழிச்சொற்களை ஏற்றுக்கொண்டார். இறுதியில் தந்தையின் சித்தப்படி உயிரையே பலியாக்கி விடுதலை தந்து இன்றும் எங்கள் மத்தியில் வார்த்தை வடிவில் வாழ்ந்து கொண்டேயிருக்கின்றார். “வார்த்தை மனுவுருவானார் நம்மிடையே குடிகொண்டார்.” வார்த்தை வடிவில் எங்கள் மத்தியில் வாசம் செய்யும் இயேசுவை ஏற்றுக் கொண்டு வாழ எமக்கு அன்பின் கட்டளைகளை கொடுத்திருக்கின்றார். அவற்றை நாங்கள் கடைப்பிடித்து வாழ்ந்தோமேயானால் எமக்கு மீட்பு நிற்சயம் அத்துடன் இறையாசீர்வாதமும் என்றும் எமக்கு பொழியப்படும் என்பதை யோவான் (14:23-24)ல் பார்க்கின்றோம். “நான் தரும் கட்டளைகளை கடைப்பிடிப்பவர்கள் என்மீது அன்பு கொண்டுள்ளனர், என்மீது அன்பு கொண்டுள்வர் மீது என் தந்தையும் அன்பு கூர்வார்” இன்று நாங்கள் எவ்வாறான வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்று சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம். ஏனெனில் இயேசு எங்கள் கூடவே இருக்கின்றார் என்பதை மறந்து மாய உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இயேசு எங்கள் கூடவே இருக்கிறார் என்பதை நாங்கள் வாழும் வாழக்கை முறையின் மூலமே கண்டு கொள்ளமுடியும். ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொண்டவவர்களாக, அவர்கள் இன்ப துன்பங்களில் பங்குகொண்டு, ஆறுதல் கூற யாருமே இல்லை என்று அறிந்தால். அவர்களுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறுதல், அவ்வாறு செய்படும் போது நாங்கள் இறைவனையே அன்பு செய்கின்றோம். எனவே இதை உணர்ந்தவர்களாக தினமும் இறைவார்த்தையை வாசித்து அதன்படி வாழ்ந்து அன்று அன்னைமரியாள் எவ்வாறு தூய ஆவியால் நிரப்பப்பட்டாரோ அதே போன்று ஆவியானவரால் நிரப்பப்பட்டவர்களாக நாம் பெற்றுக்கொண்ட சாட்சிய வாழ்வை மற்றவர்களும் அறிவிக்க அதற்குத் தேவையான வரத்தை பெற்றிட வேண்டுவோம்.